RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-353 | 20 டிசம்பர் | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ஜம்மு காஷ்மீரில் என்கவுன்ட்டர் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொலை

ஸ்ரீநகர், டிச.20



ஜம்மு காஷ்மீரின் குல்காம் மாவட்டத்தில் நேற்று காலை நடந்த என்கவுன்ட்டரில் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த என்கவுன்ட்டரின் போது இரண்டு ராணுவ வீரர்களும் காயமடைந்தனர்.

முன்னதாக நேற்று இரவு தீவிரவாதிகள் நடமாட்டம் குறித்து வந்த தகவலை ஒட்டி பாதுகாப்புப் படையினர் அப்பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் வேட்டையைத் தொடங்கினர். அதனைத் தொடர்ந்து இன்று அதிகாலை 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக சினார் கார்ப்ஸ் படைப்பிரிவு சார்பில் சமூகவலைதளத்தில், "டிசம்பர் 19 ஆம் தேதியன்று இந்திய ராணுவமும், ஜம்மு காஷ்மீர் காவல்துறையும் சேர்ந்து குல்காம் பகுதியில் தீவிரவாதிகள் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டது. அதனை அறிந்து தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். அதற்கு பாதுகாப்புப் படை தரப்பில் தகுந்த பதிலடி கொடுக்கப்பட்டது. இதில் 5 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். 2 ராணுவ வீரர்கள் காயமடைந்தனர்." எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு முழுவதும் ஜம்மு காஷ்மீரில் தீவிரவாத தாக்குதல் அதிகரித்துள்ளது. 8 முதல் 10 மாவட்டங்களில் தாக்குதல்கள் நடந்துள்ளன. பல்வேறு தீவிரவாத தாக்குதல்களீலும் 44 பேர் உயிரிழந்துள்ளனர். இவர்களில் 18 பேர் படை வீரர்கள், 14 பேர் பொது மக்கள், 13 பேர் தீவிரவாதிகள் ஆவர்.

## சென்னை ஐசிஎஃப்க்கு தேசிய எரிசக்தி சேமிப்பு விருது

சென்னை, டிச.20



வந்தே பாரத் ரயில் தயாரிப்பில் சிறப்பு அம்சமாக மின் சிக்கனத்தை உருவாக்கியதற்காக, தேசிய எரிசக்தி சேமிப்பு விருது சென்னை ஐசிஎஃப்க்கு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய எரிசக்தி சேமிப்பு தின நிகழ்ச்சி புதுடெல்லி விஞ்ஞான் பவனில் அண்மையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில், குடியரசு துணைத் தலைவர் ஜக்தீப் தன்கர் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில், வந்தே பாரத் ரயில் தயாரிப்பின் சிறப்பு அம்சமாக மின் சிக்கனத்தை உருவாக்கியதற்காக, தேசிய எரிசக்தி சேமிப்பு விருது சென்னை ஐசிஎஃப்க்கு வழங்கப்பட்டுள்ளது.

மத்திய மின்சாரம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்களுக்கான அமைச்சர் மனோகர் லால், புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்திக்கான இணை அமைச்சர் ஸ்ரீபாத் யெஸ்ஸோ நாயக் ஆகியோரிடம் இந்த விருதை ஐசிஎஃப் முதன்மை தலைமை மின் பொறியாளர் சி.ஆர்.ஹரிஷ் பெற்றுக் கொண்டார்.

உற்பத்தி மற்றும் செயல்பாட்டில் எவ்வித சமரசம் இன்றி, மின் நுகர்வை குறைக்க முயற்சி எடுக்கும் தொழில்கள் மற்றும் நிறுவனங்களை கவுரவிக்கும் விதமாக தேசிய எரிசக்தி சேமிப்பு விருது வழங்கப்படுகிறது. வந்தே பாரத் ரயிலின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாக, மின் சிக்கனம் இடம்பெற்றுள்ளதால், இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் ஆண்டும் டிச.14ம் தேதி கொண்டாடப்படும் தேசிய எரிசக்தி சேமிப்பு தினத்தில் மத்திய அரசின் முக்கிய பிரமுகர்களால் இந்த விருது வழங்கப்படுகிறது.

## "சமூக அநீதிகளிலிருந்து இந்தியாவை விடுவித்தவர் அம்பேத்கர்" புகழாரம் சூடிய கமல்ஹாசன்

சென்னை, டிச.20



"அர்த்தமுள்ள உரையாடல்கள், விவாதங்கள், அம்பேத்கரின் சிந்தனைகளைப் பற்றிய ஆய்வுகள் என்று நாடாளுமன்றத்தின் மரியாதை மிக்க அரங்குகளை நடத்திச் செல்ல வேண்டும். இந்த விவாதங்கள் முன்னேற்றத்தை நோக்கியதாக இருக்க வேண்டுமே தவிர, எங்களைப் போல அம்பேத்கரைப் பெருமிதத்துடன் பின்பற்றுகிறவர்களைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது." என்று மநீம தலைவர் கமல் ஹாசன் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக மநீம தலைவர் கமல்ஹாசன் தனது எக்ஸ் தளப் பக்கத்தில், "நவீன இந்தியாவின் கட்டுமானத்துக்கு பாபா சாகேப் அம்பேத்கரின் சிந்தனையே அடித்தளம். அன்னியர்களின் அடக்குமுறையிலிருந்து இந்தியாவை காந்திஜி விடுவித்த தருணத்தில், இந்தியா தனக்குத்தானே சுமத்திக் கொண்டிருந்த சமூக அநீதிகளிலிருந்து டாக்டர் அம்பேத்கர்தான் இந்தியாவை விடுவித்தார்.

அனைவருக்கும் சுதந்திரம், அனைவருக்கும் சம நீதி, பிறப்பால் அனைவரும் சமம் என்னும் பாபா சாகேப் அம்பேத்கரின் கொள்கையை நம்பி அதற்காகப் போராடும் எந்த இந்தியரும், அப்பெருமகனின் மாண்பு சீர்குலைக்கப்படுவதை சகித்துக் கொள்ள மாட்டார்.

நவீனத்துவமும் தார்மீகமும் கொண்ட சர்வதேச சக்தியான நாம், அரசியல் சாசனம் உருக் கொண்டதன் 75ம் ஆண்டை அர்த்தமுள்ள உரையாடல்கள், விவாதங்கள், அம்பேத்கரின் சிந்தனைகளைப் பற்றிய ஆய்வுகள் என்று நாடாளுமன்றத்தின் மரியாதை மிக்க அரங்குகளை நடத்திச் செல்ல வேண்டும். இந்த விவாதங்கள் முன்னேற்றத்தை நோக்கியதாக இருக்க வேண்டுமே தவிர, எங்களைப் போல அம்பேத்கரைப் பெருமிதத்துடன் பின்பற்றுகிறவர்களைப் புண்படுத்துவதாக இருக்கக்கூடாது." என்று அவர் கூறியுள்ளார்.

## பிற மாநில கழிவுகள் தமிழகத்தில் கொட்டப்படாத அளவுக்கு திடமான நடவடிக்கைகள் தேவை: இபிஎஸ்

சென்னை, டிச.20



பிற மாநில கழிவுகள் தமிழகத்தில் கொட்டப்படாத அளவிற்கு திடமான நடவடிக்கைகள் தேவை என அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக அவர், "கேரள மாநிலத்தில் இருந்து மருத்துவக் கழிவுகள் தமிழ்நாட்டின் எல்லை மாவட்டங்களில் தொடர்ந்து கொட்டப்பட்டு வரும் நிலையில், தற்போது திருநெல்வேலி மாவட்டத்தின் கல்லூர், பழவூர் உள்ளிட்ட பகுதிகளில் கொட்டப்பட்டிருப்பதற்கு எனது கடும் கண்டனம்.

கேரள முதல்வருடன் கை குலுக்கி போட்டோஷூட் எடுப்பதில் மட்டும் முனைப்பாக இருக்கும் ஸ்டாலின்க்கு, முல்லைப் பெரியாற்றில் மாநில உரிமைகளை நிலை நாட்ட தான் திராணியில்லை என்று பார்த்தால், அண்டை மாநிலத்தின் கழிவுகள் நம் மாநிலத்தில் கொட்டப்படுவதை எதிர்க்கக் கூட தெம்பில்லாத முதல்வராக இருக்கிறார்.

வளமிகு தமிழ்நாடு, யாருடைய குப்பைத் தொட்டியும் அல்ல! கொட்டப்பட்டு இருக்கக்கூடிய மருத்துவ கழிவுகளால் மக்களுக்கு பல்வேறு தொற்று நோய் பரவவாய்ப்புள்ளதால் அனைத்து குப்பைகளும் உடனே அகற்றப்பட வேண்டும். இனி இது போன்று பிற மாநில கழிவுகள் கொட்டப்படாத அளவிற்கு திடமான நடவடிக் கைகள் மேற்கொள்ள வேண்டுமென திமுக அரசை வலியுறுத்துகிறேன்." என்று குறிப்பிட் டுள்ளார்.

## அமித் ஷா பேச்சு: நாடாளுமன்ற வளாகத்தில் பாஜக, காங்கிரஸ் பரஸ்பரம் குற்றஞ்சாட்டி போராட்டம்

புதுடெல்லி, டிச.20



அம்பேத்கர் பற்றிய அமித் ஷாவின் கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து காங்கிரஸ் மற்றும் இண்டியா கூட்டணிக் கட்சிகளும், அமித் ஷா கருத்தை எதிர்க்கட்சிகள் திரித்து சர்ச்சையாக்குவதாகக் கூறி பாஜகவும் இன்று (டிச.19) காலை நாடாளுமன்ற வளாகத்தில் போராட்டத்தில் ஈடுபட்டன. இதனால் நாடாளுமன்ற வளாகத்தில் சலசலப்பு நிலவியது.

பாஜக எம்.பி.க்கள் போராட்டம்: நாடாளுமன்ற வளாகத்தில் இன்று திரண்ட பாஜக எம்.பி.க்கள், 'பாபா சாஹேப் அம்பேத்கர் நமக்கு வழிகாட்டினார். ஆனால் காங்கிரஸ் தவறான பாதையில் இட்டுச் சென்றது' என்ற பதாகைகளை ஏந்தியபடி காங்கிரஸை குற்றஞ்சாட்டினர். ஊடகங்களிடம் பேசிய மத்திய அமைச்சர் கிரிராஜ் சிங், "காங்கிரஸ் குடும் பத்தினர் தங்களுக்கு பாரத ரத்னா விருது வழங்கிக் கொண்டனர். ஆனால் பாபா சாஹேப் அம்பேத்கருக்கு அவர்கள் வழங்கவில்லை. அதன்மூலம் பாவம் செய்தனர். அந்தப் பாவத்தைப் போக்க அவர்கள் ஒரு நாள் மவுன விரதம் இருக்க வேண்டும்.

அமித் ஷா பேச்சை காங்கிரஸ் திரித்துப் பேசுகிறது. அம்பேத்கருக்கு பாரத் ரத்னா விருது வழங்கியது பாஜக அரசு தான். அமித் ஷா பேச்சை அரசியலாக்கி அதன்மூலம் தனக்கு பிரபல்யத்தைத் தேடிக் கொள்ள காங்கிரஸ் முயற்சிக்கிறது" என்றார்.

போராட்டத்தின் போது பாஜக எம்பி பிரதாப் சாரங்கி காயமடைந்துள்ளார். நாடாளுமன்றத்துக்கு வந்த காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி ஒரு எம்.பி.யை தள்ளிவிட அவர் தன் மீது விழுந்ததால் தனக்கு காயம் ஏற்பட்டதாக சாரங்கி குற்றஞ் சாட்டியுள்ளார்.

காங்கிரஸ் கோஷம்: காங்கிரஸ் கட்சியினர் நாடாளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் சிலை அருகே போராட்டத்தில் ஈடுபட்டனர். ராகுல் காந்தி, பிரியங்கா காந்தி, மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்டோர் பங்கேற்று அமித் ஷாவுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர்.

இத்தகைய சலசலப்புகளுக்கு இடையே மக்களவை, மாநிலங்களவை இரண்டும் பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

அமித் ஷா பேசியது என்ன? முன்னதாக, மாநிலங்களவையில் கடந்த செவ்வாய்க்கிழமை விவாதம் நடைபெற்றது. விவாதத்தின் முடிவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா பேசும்போது, 'அம்பேத்கர்.. அம்பேத்கர்.. அம்பேத்கர்' என முழக்கமிடுவது இப்போது ஃபேஷன் ஆகிவிட்டது. இதற்கு பதிலாக கடவுளின் பெயரை இவ்வளவு முறை உச்சரித்திருந்தால், சொர்க்கத்தில் அவர்களுக்கு இடம் கிடைத்திருக்கும். அம்பேத்கரின் பெயரை காங்கிரஸ் எடுத்துக்கொள்வதில் பாஜக மகிழ்ச்சியடைகிறது. ஆனால் அவர் மீதான உண்மையான உணர்வுகள் குறித்தும் காங்கிரஸ் பேச வேண்டும்" எனப் பேசியிருந்தார்.

எதிர்க்கட்சிகள் கண்டனம்: அம்பேத்கர் குறித்த மத்திய அமைச்சர் அமித் ஷாவின் பேச்சுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனத்தை தெரிவித்து வருகின்றன. மேலும், அம்பேத்கரை மத்திய அமைச்சர் அமித் ஷா அவமதித்துவிட்டதாக கூறி, நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் அம்பேத்கரின் புகைப்படத்தை கையில் ஏந்தி போராட்டம் நடத்தினர்.

மேலும், மக்களவையில், "ஜெய் பீம், ஜெய் பீம்" என்று எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அவையில் முழக்கமிட்டனர். மாநிலங்களவையிலும் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அமளியில் ஈடுபட்டனர். அப்போது அவையில், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவரும், காங்கிரஸ் தேசியத் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே, அம்பேத்கரின் புகைப்படத்தை எடுத்து உயர்த்திக் காட்டினார்.

தமிழகத்திலும் எதிர்ப்பு: "அதிக பாவங்கள் செய்பவர்கள்தான் புண்ணியத்தை பற்றி கவலைப்பட வேண்டும். நாட்டை பற்றியும், மக்களை பற்றியும், அரசியலமைப்பு சட்டத்தின் பாதுகாப்பு பற்றியும் கவலைப்படுவோர் அம்பேத்கர் பெயரைத் தான் சொல்வார்கள். சொல்ல வேண்டும்." என்று தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது கண்டனத்தைப் பதிவு செய்திருந்தார்.

மேலும் அம்பேத்கரை அவமதித்த மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவைக் கண்டித்து திமுக சார்பில் இன்று (19 122024) தமிழ்நாடு முழுக்கவும் ஆர்ப்பாட்டம் நடத்துகிறது. இதேபோல் விசிகவினர் ஆங்காங்கே ரயில் மறியல் போராட்டம் நடத்தியுள்ளனர்.

அம்பேத்கரை இழிவுபடுத்திய அமித்ஷாவை உள்துறை அமைச்சர் பொறுப்பில் ஒருவினாடியும் நீடிக்க தகுதியற்றவர். அவரை அமைச்சரவையில் இருந்து வெளியேற்ற வலியுறுத்தி இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தமிழ்நாடு முழுவதும் மாவட்ட, மாநகர, நகர, பேரூர் மற்றும் ஒன்றியத் தலைநகர்களில் நாளை (20.12.2024 வெள்ளிக்கிழமை) ஆர்பாட்டத்தில் ஈடுபடும் என்று அக்கட்சியின் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் அறிவித்துள்ளார்.

## மகளிர் சுய உதவி குழுக்களின் உணவு திருவிழா மெரினாவில் துணை முதல்வர் நாளை தொடங்கி வைக்கிறார்

சென்னை, டிச.20




மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் உணவுப் பொருட்களின் உணவுத் திருவிழா இன்று (டிச.20) தொடங்கி 24ம் தேதி வரை சென்னை, மெரினா கடற்கரையில் நடைபெறுகிறது. இதை துணை முதல்வர் உதயநிதி தொடங்கி வைக்கிறார்.

உணவுத் திருவிழாவில், கோவை கொங்கு மட்டன் பிரியாணி, கிருஷ்ணகிரி நோ ஆயில் நோ பாயில் உணவு வகைகள், கரூர் தோல் ரொட்டி மட்டன் கிரேவி, தருமபுரி ரவா கஜூர், நீலகிரி ராகி களி அவரை குழம்பு, திருப்பூர் முட்டை ஊத்தப்பம், காஞ்சிபுரம் கோவில் இட்லி, தஞ்சாவூர் பருப்பு உருண்டை குழம்பு, மயிலாடுதுறை இறால் வடை, கன்னியாகுமரி பழம் பொறி, சென்னை தயிர் பூரி உள்ளிட்ட 100க்கும் மேற்பட்ட உணவு வகைகள் விற்பனை செய்யப்படவுள்ளன.

அரியலூர் வறுத்த முந்திரி, செங்கல்பட்டு நாட்டுச் சர்க்கரை எள்ளுருண்டை, சென்னை வேர்க்கடலை நெய் லட்டு, கருப்புக் கவுனி அரிசி லட்டு உள்ளிட்ட 67 வகையான தயார் நிலை உணவுப் பொருட்களும் விற்பனைக்கு இடம்பெறுகின்றன. மேலும் சுய உதவிக் குழுக்கள் தயாரித்த கைவினைப் பொருட்கள் உள்ளிட்ட 45 வகையான பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்படும். இவ்வாறாக 40க்கும் மேற்பட்ட அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

தொடக்க நாளில் மாலை 4 முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும் உணவுத் திருவிழா, மற்ற நாட்களில் பிற்பகல் 12.30 முதல் இரவு 8.30 மணி வரை நடைபெறும். லேடி வெலிங்டன் கல்லூரி, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் ராணி மேரி கல்லூரி ஆகிய கல்லூரிகளின் வளாகங்களில் இலவசமாக வாகனங்களை நிறுத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது எனத் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதிமுக ஐடி பிரிவு நிர்வாகி நிர்மல்குமாரை கைது செய்ய இடைக்கால தடை

சென்னை, டிச.20



வலைதள பக்கத்தில் பொய் தகவலை பரப்பியதாக பதியப்பட்ட வழக்கில் அதிமுக ஐடி பிரிவு நிர்வாகியான நிர்மல் குமாரை கைது செய்ய உயர் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது.

ஃபெஞ்சல் புயல் காரணமாக சென்னையில் கனமழை பெய்த போது மெரினாவில் தேங்கிய மழைநீரில் மின்கசிவு ஏற்பட்டதாக அதிமுக ஐடி பிரிவு நிர்வாகியான சி.டி.ஆர். நிர்மல்குமார் தனது வலைதளப் பக்கத்தில் பதிவிட்டிருந்தார். அதையடுத்து பொய்யான தகவலைப் பரப்பியதாக அதிமுக நிரவாகியான நிர்மல்குமார் மீது சென்னை சைபர் க்ரைம் போலீஸார் 3 பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கில் முன்ஜாமீன் கோரி நிர்மல்குமார் சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி ஏ.டி.ஜெகதீஷ் சந்திரா முன்பாக நடந்தது. அப்போது காவல் துறை தரப்பில் ஆஜரான குற்றவியல் வழக்கறிஞர் சந்தோஷ், 'மனுதாரரான நிர்மல் குமார் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக உறுதிப்படுத்தப்படாத பொய்யான தகவல்களை சமூக வலைதளங்களில் பதிவிடுவதை தனது வாடிக்கையாக வைத்துள்ளார்.

உறுதிப்படுத்தப்படாத தகவல்களை பதிவிட மாட்டேன் என ஏற்கெனவே நீதிமன்றத்தில் உறுதியளித்தும், தொடர்ந்து தவறான பதிவுகளை பதிவிட்டு பொதுமக்களுக்கு தேவையற்ற பீதியை ஏற்படுத்தி வருகிறார்' என்றார்.

விசாரணை நாளைக்கு தள்ளிவைப்பு: அதையடுத்து நீதிபதி, ''எந்தவொரு உறுதிப்படுத்தப்படாத, பொய்யான தகவல்களையும் தனது வலைதளப் பக்கத்தில் இனி பதிவிட மாட்டேன்'' என பிரமாணப் பத்திரம் தாக்கல் செய்ய நிர்மல்குமாருக்கு அறிவுறுத்தி விசாரணையை நாளைக்கு (டிச.20) தள்ளிவைத்தார். அதுவரை நிர்மல்குமாரை கைது செய்யக்கூடாது என இடைக்கால தடை விதித்து உத்தரவிட்டுள்ளார்.

மாலை தந்தி



## வேலூர் அரசு பொறியியல் கல்லூரியில் தொழில்நுட்பத் திறன் மேம்பாட்டு விழா



வேலூர் டிச.20

வேலூர் மாவட்டம். இடையன் சாத்து, அரசு பொறியியல் கல்லூரியில், நான் முதல்வன் திறன் திறன் மற்றும் வேலை வாய்ப்பு நிகழ்ச்சி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், கோயம்புத்தூர் மாவட்டம், கோவை அரசு தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற விழாவில் இளைஞர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தும் விதமாக நான் முதல்வன் திறன் மற்றும் வேலை வாய்ப்பு மையத்தை கடந்த (18.12.2024) தொடக்கியதைத் தொடர்ந்து, வேலூர் அரசு பொறியியல் கல்லூரியில் அமைந்துள்ள நான் முதல்வன் திறன் மற்றும் வேலை வாய்ப்பு மையத்தை மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில் வேலூர் மாநகராட்சி மேயர், 4வது மண்டல குழு தலைவர் வெங்கடேசன், (வேஆர்.டி.ஒ) பாலசுப்பிரமணியன், கல்லூரி முதல்வர் முனைவர் பி.கே. பழனி, பயிற்சி அலுவலர் தனகீர்த்தி, வேலூர் மாவட்ட நான் முதல்வன் திட்ட ஒருங்கிணைப்பாளர் செல்வி ரம்யா உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வேலூர் மாவட்டம், கணியம்பாடி வட்டம், மோத்தக்கல் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில், "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ், மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்து, மாணவ, மாணவியர்களின் கற்றல் திறன்களை கேட்டறிந்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி, (வேஆர்.டி.ஒ) பாலசுப்பிரமணியன், உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) செல்வி உமா மற்றும் அரசு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## குடியாத்தம் ஆசீர்வாத் பள்ளி மாணவர்கள் வில்வித்தையில் தங்கம்-வெள்ளி பதக்கங்கள் பெற்று சாதனை! ஆட்சியர் பாராட்டு



வேலூர் டிச.20

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாக காயிதே மில்லத் அரங்கில் சாதனை படைத்த ராஜஸ்தானில் வில்வித்தையில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் பெற்றுசாதனைபடைத்த குடியாத்தம் ஆசிர்வாத் பள்ளி மாணவர்களுக்கு பாராட்டு, இராஜஸ்தான் மாநிலம் புனாவில் கடந்த 08.12.2024 அன்று நடைபெற்ற தேசிய அளவிலான 11வது றிரிசீகிகி (பைக்கா) வில்வித்தை 2024ம் சாம்பியன் ஷிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றிப் பெற்று சாதனைப்படைத்த ஆசிர்வாத்

இண்டர்நேஷனல் சீனியர் செகண்டரி பள்ளியை சார்ந்த Sai srinik Krishna (gold), Tashyan (silver), Dhooshinee (gold), sarini (gold), sanjana (gold), Devanath (silver), Natheesh (silver) ஆகிய மாணவ, மாணவிகள் தங்கள் பெற்ற தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை வேலூர் மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமியிடம் காண்பித்து வாழ்த்து பெற்றனர். இந்நிகழ்வின் போது மாவட்ட விளையாட்டு அலுவலர் பால முருகன், ஆசீர்வாத் பள்ளியின் தாளாளர் மஞ்சுநாத், முதல்வர் பிரமிளா கண்ணன், உடற்கல்வி இயக்குனர் விஜயன், பயிற்சியாளர் சாரதி மற்றும் மேலாளர்கள் விக்னேஷ், தினேஷ் மற்றும் பலர் உடனிருந்தார்.

## தாம்பரம் மாநகராட்சி 1வது மண்டலத்தில் தீவிர தூய்மைப் பணி



செங்கல்பட்டு டிச.20

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொது சுகாதாரத் துறையின் சார்பில் தீவிரத் தூய்மைப் பணியின் கீழ் தெருக்கள் மற்றும் சாலைகள் சுத்தம் செய்தல், மழைநீர் வடிகால்கள் தூர்வாருதல், கொசு ஒழிப்பு நடவடிக்கைகள், தெருவிளக்குகள் சீர்செய்தல், சாலைகளில் உள்ள சிறு, சிறு பழுதுகள் சரி செய்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தாம்பரம் மாநகராட்சியின் 5 மண்டலங்களிலும் தீவிரத் தூய்மைப் பணியினைத் தொடங்கி வைக்கும் விதமாக மேயர் வசந்தகுமாரி கமலகண்ணன் 4வது மண்டலம், 32வது வார்டு, திருநீர்மலை சாலையில் தீவிரத் தூய்மைப் பணியினைத் கடந்த 16ம் தேதி தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி, 3வது வார்டு, அனகாபுத்தூர் பகுதியில் 88 தெருக்களில் பணிகள் நடைபெற்றது. இதில் 30 குப்பைகள் அகற்றும் வாகனங்களில், 120 பணியாளர்கள் ஒரே நாளில் தீவிரத் தூய்மைப் பணியில் ஈடுபட்டனர்.

## மதுரை மாநகரில் நாளை மின்தடை




மதுரை: டிச.20

தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 110/3311 கி.வோ அரசரடி உப மின் மின்நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவிருப்பதால்

21.12.2024 (சனிக்கிழமை) காலை 09.00மணி முதல் மாலை 05.00 மணி வரை மதுரை மாநகரில் கீழ்காணும் பகுதிகளில் மின்தடை ஏற்படும் என தெரிவிக்கப்படுகிறது.

மின்தடை ஏற்படும் பகுதிகள் சம்பட்டிபுரம் மெயின் ரோடு, ஜெர்மானூஸ் சில பகுதிகள். முத்துராமலிங்க தேவர் தெரு, ஸ்ரீராம்நகர், HMS காலனி, டோக்நகர் 416 தெரு, தேனி மெயின் ரோடு, விராட்டிபத்து சில பகுதிகள், மாப்பிள்ளை விநாயகர் தியேட்டர், பல்லவன் நகர், முடக்குச் சாலை, வ.உ.சி மெயின் ரோடு, E.Bகாலனி, நடராஜ் நகர், அசோக் நகர், டோக்நகர் 13 தெரு, கோச்சடை கிராமம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள், ஜெயில் ரோடு, மேலபொன்னகரம் 8,10,11,12 தெரு, கனரா பாங்க் முதல் டாக்சி ஸ்டாண்ட வரை, ஆர்.வி. நகர், ஞானஒளிபுபுரம், விசுவாசபுரி 15 தெரு, முரட்டம்பத்ரி, கிரம்மர்புரம், மீல் காலனி, ஆரப்பாளையம் பஸ் ஸ்டாண்டு, ESI மருத்துவமனை, கைலாசபுரம், SS காலனி ஏரியா, வடக்கு வாசல், அருணாச்சலம் தெரு, கம்பர் தெரு, ஜவகர் 15 தெரு, தினமலர் பத்திரிக்கை, DSPநகர், SBO காலனி சொக்கலிங்கநகர் 1.9 தெரு, பொன்மேனி, சம்பட்டிபுரம், பொன்மேனி மெயின் ரோடு, பாரதியார் மெயின் ரோடு, மத்திய சிறைச்சாலை, பாண்டியன் நகர், பைபாஸ் ரோடு, பெத்தானியாபுரம் பாத்திமாநகர், இன்கம் டாக்ஸ் காலனி, இந்திராநகர். ஆகிய பகுதிகளில் மின்தடை ஏற்படும்.



தமிழ்நாடு முதலமைச்சர் ஆணைக்கிணங்க, தென்காசி மாவட்டம், குற்றாலத்தில் அமைப்புசார் தொழிலாளர்கள், அவர்கள் குடும்பத்தினர்கள் மற்றும் பொது மக்களின் பயன்பாட்டிற்காக ரூ.1.82 கோடி மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட திரு வி.க. தொழிலாளர் ஓய்வு இல்லத்தினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் திறந்து வைத்து குத்து விளக்கேற்றினார்.

## கன்னியாகுமரியில் "நிறைந்தது மனம்" நிகழ்ச்சி வாயிலாக தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் பயனடைந்த மாணவர்கள் ஆட்சியரை சந்தித்து நன்றி








கன்னியாகுமரி, டிச.20

அரசு பள்ளிகளில் பயின்ற ஏழை எளிய மாணவர்களை சாதனையாளர்களாக உருவாக்கிடவும் அரசுப்பள்ளிமாணவரின் உயர்கல்வி சேர்க்கையை உயர்த்திடவும் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளிட்டோரின் கோரிக்கையினை நிறைவேற்றும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் .மு.க. ஸ்டாலின் கோயம்புத்தூர் அரசு கலைக்கல்லூரியில் 09.08.2024 தமிழ்ப்புதல்வன் எனும் மாபெரும் திட்டத்தினை துவக்கி வைத்தார்.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ஆர்.அழகுமீனா, தெரிவிக்கையில்

கன்னியாகுமரி மாவட்டத்தில் 09.08.2024 அன்று முதற்கட்டமாக 134 கல்லூரியை சேர்ந்த 3104 மாணவர்களுக்கு ரூ.1000 க்கான டெபிட் கார்டு மற்றும் உயர்கல்வி

மற்றும் வேலைவாய்ப்பு வழிகாட்டி மலர். தமிழ் பெருமிதம் கையேடு அடங்கிய வரவேற்பு பெட்டகம் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது.

நமது மாவட்டத்தில் 09.08.2024 முதல் இதுநாள் வரை 8265 விண்ணப்பித்துள்ளார்கள். இதில் 7578 மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 அவர்களது வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டு வருகிறது. மேலும் விண்ணப்பித்த தகுதியான மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை இத்திட்டத்தில் விண்ணப்பிக்காத 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் தமிழ் மற்றும் ஆங்கில வழியில் பயின்றவர்களும், அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவர்கள் தாங்கள் படிக்கும் கல்லூரிகளில் இத்திட்டத்தில் இணைந்து பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நிறைந்தது மனது நிகழ்ச்சி வாயிலாக தமிழ்புதல்வன் திட்டத்தில் பயனடைந்த கப்பியறை ஊராட்சிக்குட்பட்ட கண்ணன்விளாகம் பகுதியை சார்ந்த செல்வன்மகேஷ் தெரிவிக்கையில்:

நான் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள கப்பியறை கண்ணன்விளாகம் என்னும் ஊரில் வசித்து வருகிறேன். எனது 13வது வயதில் அப்பா நோயினால் இறந்துவிட்டார். எங்கள் குடும்பத்தில் நானும், அம்மா, அக்கா ஆகிய மூன்று பேரும் பஞ்சாயத்திலிருந்து கட்டித்தந்த வீட்டில் வசித்து வருகிறோம். நாங்கள் மிகவும் வறுமையில் வாழ்ந்து வருகிறோம். நான் 1 முதல் 10ஆம் வகுப்பு வரை செல்லங்கோணம் அரசு பள்ளியில் படித்தேன். அதன் பிறகு 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற சான்றிதழ்களை வைத்து Counselling வழியாக Friends தொழிற்பயிற்சி நிறுவனத்தில் Diploma in Electronic Mechanic பாடப்பிரிவில் 2023 2024 ஆம் கல்வி ஆண்டில் சேர்ந்து படித்து வருகிறேன். தற்போது 2ஆம் ஆண்டு படித்து வருகிறேன். இந்த சூழ்நிலையில் ம தமிழ்நாடு முதலமைச்சர் தொடங்கப்பட்ட "தமிழ்ப் புதல்வன்" திட்டம் மூலம் மாதந்தோறும் ரூ. 1000/ பெறும் திட்டத்தில் நானும் ஒரு பயனாளியாகும் வாய்ப்பு கிடைத்தது. அத்தொகையை வங்கியிலிருந்து பெறுவதற்கு கிஜிவி அட்டையை நான் படிக்கும் கல்லூரி மூலம் பெற்றுக் கொண்டேன். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு மாதமும் ரூ. 1000/ எனக்கு கிடைக்கிறது. இதனால் வறுமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் எனக்கு படிக்கவும் சாப்பிடவும் உதவி கிடைக்கிறது. ஆகவே இந்த திட்டத்தை தொடங்கிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

நிறைந்தது மனது நிகழ்ச்சி வாயிலாக தமிழ்புதல்வன் திட்டத்தில் பயனடைந்த கப்பியறை ஊராட்சிக்குட்பட்ட கண்ணன்விளாகம் பகுதியை சார்ந்த செல்வன், சந்திரஸ்ரீ தெரிவிக்கையில்:

என்னுடைய பெயர் மு. சந்திரஸ்ரீ. நான் ஆரல்வாய் மொழியில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பொருளாதாரம் பயின்று வருகிறேன். என்னுடைய தந்தை கூலிவேலை செய்து வருகிறார். எனக்கு தாய் இல்லை. எனக்கு ஒரு

தம்பியும் இரண்டு தங்கைகளும் இருக்கின்றனர். என் தந்தைக்கு கிடைக்கும் சிறிய வருமானத்தில் அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கே சிரமமாக இருந்தது. இதில் என்னுடைய கல்விச்செலவு மற்றம் என் தம்பி மற்றும் தங்கைகளின் கல்விச் செலவிற்கு எனது தந்தை மிகவும் சிரமப்பட்டிருந்த வேளையில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் தமிழ்ப் புதல்வன் திட்டம் தமிழ்நாடு முதலமைச்சரால் அறிமுகப் படுத்தப்பட்டது. எனக்கு இது மட்டற்ற மகிழ்ச்சியையும், தன்னம்பிக்கையும் அளித்தது. தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் மூலம் மாதம் ரூ.1000 கிடைக்கிறது. அந்த பணம் எனக்கு கல்வி கட்டணம். தேர்வு கட்டணம் செலுத்தவும் புத்தகங்கள் வாங்கவும் பயன்படுகிறது. வாழ்விற்கு வழி காட்டிய தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

தொகுப்பு:

**பா.ஜாண் ஜெகத் பிரைட்,**
*செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,*
**எஸ்.செல்வலெட் சுஷ்மா,**
*உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி), கன்னியாகுமரி மாவட்டம்.*

## வேலூர் சத்துவாச்சாரி காவல் கண்காணிப்பாளரிடம் ஏ.கே.டி.வி நிறுவனர் கோரிக்கை மனு



வேலூர் டிச.20

வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அலுவலகத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மதிவாணன் தலைமையில் பொதுமக்கள் குறைதீர்வு நாள், ஒவ்வொரு வாரமும் புதன்கிழமையன்று நடத்தப்பட்டு வருகிறது. இந்த குறைதீர்வு நாளில் பொது மக்கள் தங்கள் குறைகளை மனுக்க ளாக மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் நேரில் அளித்து வருகின்றனர். மேலும் வாரத்தில் அனைத்து வேலை

நாட்களிலும் பொதுமக்களின் மனுக்களை நேரில் பெற்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, பொதுமக்களின் பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு வருகின்றது. 18.12.2024ம் தேதி நடைபெற்ற பொதுமக்கள் குறைதீர்வு நாளில் 39 மனுக்கள் பெறப்பட்டது. இந்த மனுக்கள் மீது உரிய விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்துக் கொண்டார்.

ஏ.கே.டி.வி நிறுவனரும், சமூக ஆர்வலருமான டாக்டர். ஏ.கே. சரவணன் மற்றும் ஏ.கே.டி.வி செய்தி உதவி ஆசிரியரும், தென்னிந்திய பத்திரிகையாளர் சங்கத்தின் மாவட்ட தலைவருமான டாக்டர்.ராஜ்பாபு மற்றும் செய்தியாளர்கள், நிறுவன ஊழியர்களுடன் கருகம்பத்தூர் பகுதிகளில் அதிநவீன கேமராக்களை மர்ம நபர்கள் அடிக்கடி சேதப்படுத்துவதாகவும் அவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென மாவட்ட கண்காணிப்பாளரிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

இந்நிகழ்வின் போது கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பாஸ்கரன், (தலைமையகம்) காவல்துறை ஆய்வாளர் (டெக்னிக்கல் குழு) செந்தில் குமார் மற்றும் காவல்துறை அலுவலர்கள், பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## "உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமில் சேலம் மாவட்ட ஆட்சியர் சங்ககிரியில் முகாமிட்டு ஆய்வு



சேலம்: டிச.20

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமில் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்களின் அடிப்படை வசதிகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., இரண்டாம் நாளாக கள ஆய்வு மேற்கொண்டார். கள ஆய்வுக்குப் பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது:

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்ட முகாமானது, சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டத்தில் 18.12.2024 மற்றும் 19.12.2024 ஆகிய இரண்டு நாள்கள் நடைபெற்றது.

இரண்டாம் நாளான இன்றைய தினம் 19.12.2024 காலை சங்ககிரி பேரூராட்சி அலுவலகத்தின் செயல்பாடுகள் குறித்தும், சங்ககிரி பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தினசரி மேற்கொள்ளப்பட்டுவரும் தூய்மைப்பணிகள் குறித்தும் நேரில் ஆய்வு செய்யப்பட்டு, பொதுமக்களின் அடிப்படைத் தேவைகள் மற்றும் கோரிக்கைகள் குறித்து கேட்டறியப்பட்டது.

மேலும், பொதுமக்களுக்குத் தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் முறையாக விநியோகம் செய்யப்படுகிறதா என்பது குறித்தும், மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகள் முறையாக பராமரிக்கப்பட்டு வருவது குறித்தும், குடிநீரில் முறையான அளவுகளில் குளோரினேற்றம் செய்து வழங்கப்பட்டு வருவது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதனைத்தொடர்ந்து, சேலம் மாவட்டம், சங்ககிரியில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட வீரர் தியாகி தீரன் சின்னமலை அவர்களின் நினைவுத் தூண் அமைவிடத்தினை பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

முன்னதாக, நேற்றைய தினம் (18.12.2024) சங்ககிரியில் உள்ள அரசு மாணவ, மாணவியர் விடுதிகளை ஆய்வு செய்யப்பட்டு மாணவர்களுக்கு உணவு தயாரிப்பதற்காக தரமான உணவுப் பொருட்கள் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்து, சமையலறை சுகாதாரமான முறையில் பராமரிக்கப்படுகின்றதா என்பது குறித்தும், குறித்த நேரத்தில் மாணவ, மாணவிகளுக்கு உணவுகள் பரிமாறப்படுவது குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதேபோன்று, வருகைப் பதிவேடுகளை ஆய்வு செய்து, மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் குறித்தும் கேட்டறியப்பட்டது.

மேலும், சங்ககிரி பேரூராட்சிக்குட்பட்ட புதிய மற்றும் பழைய பேருந்து நிலையங்களில் ஆய்வு செய்யப்பட்டு பயணிகளின் பாதுகாப்பு வசதிகள் குறித்து கேட்டறியப்பட்டது.

"உங்களைத் தேடி, உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், 18.12.2024 மற்றும் 19.12.2024 ஆகிய இரண்டு நாள்கள் சங்ககிரி வட்டத்தில் கள ஆய்வுப் பணியை மேற்கொண்டுள்ள அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மனுக்கள் மற்றும் கள ஆய்வு குறித்த அறிக்கையினை இன்றையதினம் வழங்கிட அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொது மக்களின் மனுக்களின்மீது தொடர்புடைய அலுவலர்கள் விரைந்து உரிய தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் இரா. பிருந்தாதேவி தெரிவித்தார். இந்த ஆய்வின்போது, சங்ககிரி வருவாய் கோட்டாட்சியர் ந. லோகநாயகி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.



மதுரை மாநகரில் வாராந்திர பொதுமக்கள் குறைதீர்க்கும் மனு கூட்டம் மதுரை மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் மாநகர காவல் ஆணையர் லோகநாதன் தலைமையில் நடைபெற்ற வாராந்திர பொதுமக்கள் குறைதீர்ப்பு முகாமில் 51 மனுதாரர்கள் நேரடியாக தங்களது புகார் மனுக்களை காவல் ஆணையரிடம் அளித்தனர். மாநகர காவல் துணை ஆணையர்(தெற்கு) மற்றும் காவல் துணை ஆணையர் (தலைமையிடம்) ஆகியயோர் உடனிருந்தனர். பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்த காவல் ஆணையர் உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

## அனகாபுத்தூரில் தமிழக வெற்றிக் கழகத்தின் கட்சி அலுவலகம் திறப்பு விழா நடைபெற்றது



அனகாபுத்தூர், டிச.20

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் அனகாபுத்தூர் பகுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் அனகை பகுதி தலைவர் எஸ் எம் மதன் மாவட்ட மகளிர் அணி தலைமை ஐஸ்வர்யா மதன் ஆகியோர் ஏற்பாட்டில் அனகாபுத்தூர் அருண்மதி திரையரங்கு அருகே கட்சி அலுவலகம் மற்றும் எஸ்.எம். டிஜிட்டல் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது இதில் சிறப்பு அழைப்பாளராக செங்கல்பட்டு மேற்கு மாவட்ட தலைவர் மின்னல்குமார் கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி கட்சி அலுவலகத்தை திறந்து வைத்து பின்னர் குத்துவிளக்கு ஏற்றி நிகழ்ச்சியை சிறப்பித்தார்,

உடன் நிகழ்ச்சியில் மாவட்ட செயலாளர் அறிவானந்தம் மாவட்ட பொருளாளர் விஜய் தியாகு மாவட்ட கவுரவ தலைவர் சங்கர், மாவட்ட வழக்கறிஞர் அணி பூவேந்தன் பல்லாவரம் தொகுதி தலைவர் ரவி, மற்றும் பல்லாவரம் பகுதி, பொழிச்சலூர் பகுதி குரோம்பேட்டை பகுதி அஸ்தினாபுரம் பகுதி தாம்பரம் பகுதி முடிச்சூர் பகுதி பம்மல் பகுதி தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் மற்றும் மாவட்ட மகளிர் அணி தொழில்நுட்ப அணி அனகாபுத்தூர் பகுதி நிர்வாகிகள் அனகாபுத்தூர் பகுதி 1வது 2வது 3வது 4வது வார்டு தமிழக வெற்றி கழக நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை தொகுதி இளையான் குடி கண்மாய் கரையில் இளையான்குடி வடக்கு ஒன்றிய செயலாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சுப.மதியரசன் தலைமையில் பேரூர் செயலாளர் றி.கி.நஜூமுதீன் ஒன்றிய செயலாளர்கள் ஆறு.செல்வராசன், கா.வெங்கட்ராமன், வே. தமிழ்மாறன் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுக்குழு உறுப்பினர் த.உதயக்குமார் மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் முருகானந்தம் தலைமை கழக பேச்சாளர் சி.அய்யாச்சாமி மானாமதுரை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் கி.கண்ணன் மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேலூர் மாநகர மாவட்ட செயலாளர் பிலிப் தலைமையில் வி.சி.க.வினருடன் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொடிகளை கையில் ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டு, மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன் உருவ பொம்மையை எரிக்க முயற்சித்தனர். பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த சத்துவாச்சாரி காவல்நிலைய, காவல் ஆய்வாளர் லதா தலைமையிலான காவல்துறையினர் பலத்த பாதுகாப்பில் உருவ பொம்மையை எரிக்கவிடாமல்தடுத்துநிறுத்தினர்.



வேலூர் மாவட்டம், கணியம்பாடி ஊராட்சி ஒன்றியம், சலமநத்தம் கிராமத்திலுள்ள மாவட்ட துப்பாக்கி சுடுதல் பயிற்சி மையத்தை, "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின்கீழ், விரிவாக்கம் செய்வது குறித்து மாவட்ட ஆட்சியர் சுப்புலட்சுமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட காவல்துறை சார்ந்த அதிகாரிகள் அலுவலர்கள் மற்றும் வேலூர் ஆர்.டி.ஒ. பாலசுப்பிரமணியன் உட்பட பலர் உடனிருந்தனர்.

# "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ், மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், கள ஆய்வு மேற்கொண்டார்









சிவகங்கை டிச.20

சிவகங்கை வட்ட அளவில் பல்வேறு பகுதிகளில் அரசின் திட்டங்கள் தொடர்பான கள ஆய்வுகள் மேற்கொண்டு, பொதுமக்களிடம் மனுக்களைப் பெற்று,

தகுதியுடைய 108 பயனாளிகளுக்கு ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

சிவகங்கை மாவட்டத்தில் மாதந்தோறும் வட்ட அளவிலான முகாம்கள் நடைபெற்று வருகிறது. அதன்படி, இம்மாதத்திற்கு இன்றையதினம் சிவகங்கை வட்டத்தில் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த முதன்மை அலுவலர்களும் தங்களது துறை ரீதியாக வட்டளவில் பல்வேறு பகுதிகளில் கள ஆய்வுகள் மேற்கொண்டு வருகின்றனர்.

மேலும், படமாத்தூர் ஊராட்சிக்குட்பட்ட அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் மாணாக்கர்களின் கற்றல் திறன் மற்றும் பள்ளியில் மேம்படுத்த வேண்டிய வசதிகள் ஆகியன குறித்தும், ரூ.30.00 இலட்சம் மதிப்பீட்டில்மேற்கொள்ளப்பட்டு வரும் படமாத்தூர் ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடத்தின் கட்டுமானப்பணிகள் குறித்தும், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறையின் சார்பில், துணை சுகாதார நிலையத்தில் செயல்பட்டு வரும் நல வாழ்வு மையத்தில் நோயாளிகளின் வருகை பதிவேடு மற்றும் முகாம்கள் நடத்தப்படும் விவரம், மருந்துகள் இருப்பு, தேவையான மருத்துவ உபகரணங்கள் ஆகியவை குறித்தும், படமாத்தூர் ஊராட்சி உயர்நிலை பள்ளிக்கென நபார்டு திட்டம் 2023-2024ன் கீழ் ரூ.105.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் 05 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் குறித்தும், APO4PY படமாத்தூர், நியாயவிலைக்கடையின் வாயிலாக குடிமைப்பொருட்கள் பெறப்படும் குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிமைப்பொருட்களின் தரம் மற்றும் இருப்பு குறித்தும், அதே பகுதியில் செயல்பட்டு வரும் அங்கன்வாடி மையத்தின் செயல்பாடுகள் மற்றும் குழந்தைகளுக்கு வழங்கப்படும் உணவின் தரம் ஆகியவைகள் குறித்தும், அப்பகுதியில் மகளிர் சுய உதவி குழுக்களின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் பயன்பாடுகள் ஆகியன குறித்து மகளிர் சுயஉதவி குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களுடன் கலந்துரையாடியும், அதே ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் ரூ.08.04 இலட்சம் மதிப்பீட்டில் 10,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியின் கட்டுமானப் பணிகள் ஆகியன குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.

இதுபோன்று, பிரதி மாதம் தோறும் மாவட்டத்தில் ஒரு வட்ட அளவில் நடைபெறவிருக்கும், உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தினை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வட்டத்திற்குட்பட்ட மதகுபட்டி பகுதியில் உள்ள தனியார் மஹாலில் நடைபெற்ற நிகழ்ச்சியின் வாயிலாக வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 04 பயனாளிகளுக்கு முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.87,500/ மதிப்பீட்டிலான இயற்கை மரண உதவித் தொகைக்கான ஆணைகளையும் என ஆக மொத்தம் 108 பயனாளிகளுக்கு ரூ.30,00,412/ மதிப்பீட்டிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித், வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சிவகங்கை சட்டமன்ற உறுப்பினர் பிஆர். செந்தில்நாதன் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.எஸ். செல்வசுரபி அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் கா.வானதி, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க திட்ட இயக்குநர் கவிதப்பிரியா, இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) இராஜேந்திர பிரசாத், சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், சிவகங்கை வட்டாட்சியர் சிவராமன் மற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த முதன்மை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்தவர்கள் ஔவையார் விருது பெற விண்ணப்பிக்கலாம்



தேனி: டிச 20

தமிழ்நாடு அரசின் சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மூலம் மார்ச்08 உலக மகளிர் தினவிழா அன்று பெண்களின் முன்னேற்றத்திற்கு சிறந்த சேவை புரிந்த ஒருவருக்கு ஔவையார் விருது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்படவுள்ளது. இவ்விருதுடன் ரூ.1.50 இலட்சத்திற்கான காசோலை, பொன்னாடை மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்விருது பெற தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கைகள், சமூக சீர்த்திருத்தம், மகளிர் மேம்பாடு, மதநல்லிணக்கம், மொழித்தொண்டு, கலை, அறிவியல், பண்பாடு, காலச்சாரம், பத்திரிக்கை, நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் மிக சிறந்து விளங்கும் மகளிராக இருத்தல் வேண்டும். மேற்கண்ட தகுதிகளை உடைய நபர்கள் https://theni.nic.in என்ற இணையதளத்தில் உரிய விண்ணப்ப படிவத்தினை பதிவிறக்கம் செய்து https://awards.tn.gov.in என்ற இணையதளத்தில் 31.12.2024க்குள் விண்ணப்பிக்கலாம்.

மேலும், தனியரது உயிர் தரவு சுயசரிதை, தனியரை பற்றிய ஒருபக்கம் அளவிலான விவரம் (தமிழ் மருதம் மற்றும் ஆங்கிலம் verdana) சேவை பற்றிய செயல்முறை விளக்கம் (புகைப்படங்களுடன்), சேவையை பாரட்டி வெளியிடப்பட்ட பத்திரிக்கை செய்தி தொகுப்பு, சமூகநல சேவையாளரின் சமூக சேவை நிறுவனத்தின் மூலம் பயனாளிகள் பயனடைந்த விவரம் மற்றும் சமூகபணியாளர் இருப்பிடத்திற்கு அருகில் உள்ள காவல் நிலையத்திலிருந்து பெறப்பட்ட குற்றவியல் நடவடிக்கை ஏதும் இல்லை என்ற சான்றுடன், இணையதளத்தில் பதிவு செய்த பிறகு அனைத்து ஆவணங்களையும் சம்மபந்தப்பட்ட மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு, கையேடாக தயார் செய்து தமிழ் (ம) ஆங்கிலத்தில் அச்சு செய்யப்பட்ட (தலா 2 நகல்கள்) உரிய கருத்துருவினை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் செயல்படும் மாவட்ட சமூகநல அலுவலகத்தில் 06.01.2025 அன்று நேரில் சமர்ப்பிக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.வி.ஷஜீவனா, தெரிவித்துள்ளார்.

## மதுரையில் காணாமல் போன 533 செல்போன்கள் உரியவர்களிடம் ஒப்படைப்பு



மதுரை: டிச 20

மதுரை மாநகர காவல் நிலைய எல்கைக்குட்பட்ட பகுதிகளில் காணாமல் போன 533 செல்போன்களை கண்டுபிடிக்க தனிப்படை அமைக்கப்பட்டு மதுரை மாநகர சைபர் கிரைம் போலீஸாரின் உதவியுடன் 533 செல்போன்கள் மீட்கப்பட்டன (கோவில் சரகம் 35, தெற்குவாசல் சரகம் 04, திருப்பரங்குன்றம் சரகம் 13, அவனியாபுரம் சரகம் 08, திடீர்நகர் சரகம் 95, திலகர் திடல் சரகம் 25, தல்லாகுளம் சரகம் 216, செல்லூர் சரகம் 32, அண்ணாநகர் சரகம் 105,) மீட்கப்பட்ட செல்போன்கள் உரிமையாளர்களிடம் மாநகர காவல் ஆணையர் அலுவலகத்தில் மதுரை மாநகர் காவல் ஆணையர் லோகநாதன் மற்றும் மாநகர துணை ஆணையர்கள் தெற்கு, வடக்கு, தலைமையிடம் மற்றும் போக்குவரத்து ஆகியோர்கள் முன்னிலையில் ஒப்படைக்கப்பட்டது. மேற்படி மொத்த சொத்துக்களின் மதிப்பு சுமார் ரூபாய் 53,30,000 ஆகும்.

## ஆண்டிபட்டி அருகே சட்ட விழிப்புணர்வு முகாம்



ஆண்டிபட்டி டிச20

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே கொத்தபட்டி கிராமத்தில் தேனி மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவும் ஆண்டிபட்டி வட்ட சட்டப் பணிக்குழுவும் இணைந்து தேசிய வறுமை ஒழிப்பு தினம் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது.

இந்த முகாமில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக கண்காணிப்பாளர் கு.இரமணபாண்டியன், மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலக முதுநிலை வருவாய் ஆய்வாளர் த.கனகமணி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் க.தீபலட்சுமி,வருவாய் ஆய்வாளர் ரா.நாகராஜன் மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழு வழக்கறிஞர் தாமோதரன் ஆகியோர்கள் கலந்து கொண்டு மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள்.

இந்நிகழ்வில் அரசு அதிகாரிகள்,கிராம பொதுமக்கள் ஆண்டிபட்டி வட்ட சட்டப்பணிகள் குழு தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

மாலை தந்தி





மதுரை மாவட்டம், தே.கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், அ.தொட்டியபட்டி ஊராட்சியில் செய்தி மக்கள் தொடர்பு துறை சார்பில் தமிழக அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் தொடர்பான சிறு புகைப்பட கண்காட்சியை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.

# மதுரை ரயில் நிலைய நடைமேடையில் ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு மல்லிகை பூ விற்பனை

மதுரை: டிச.20



மதுரையின் பிரபல பொருளான மல்லிகை மாலையாக, சரமாக மதுரை ரயில் நிலைய நடை மேடைகளில் தள்ளு வண்டிகள் மூலம் விற்பனை துவக்கப்பட்டுள்ளது. உள்ளூர் தயாரிப்புகளை பிரபலப் படுத்தும் வகையில் ரயில் நிலையங்களில் "ஒரு நிலையம் ஒரு தயாரிப்பு" விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டு வருகிறது.

மதுரை கோட்டத்தில் 35 ரயில் நிலையங்களில் 44 விற்பனை நிலையங்களில் உள்ளூர் தயாரிப்புகள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்த விற்பனை நிலையங்களில் உள்ளூர் பயணிகள் மற்றும் ரயிலில் பயணம் செய்யும் பயணிகள் ரயிலில் இருந்து இறங்கி வந்து பொருட்களை வாங்க வேண்டியநிலை இருந்துவந்தது. ரயிலில் பயணம் செய்யும் வெளியூர் பயணிகள் அந் தந்த ஊர் தயாரிப்புகளை எளிதில் வாங்கும் வகையில் நடை மேடைகளில் தள்ளுவண்டிகளில் விற்பனை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த புதிய முயற்சியான தள்ளு வண்டிகள் மூலம் விற்பனை செய்யும் முறையை அறிமுகப் படுத்தும் இரண்டாவது கோட்டம் மதுரை கோட்டமாகும்.

அதே போல திண்டுக் கல் நகரில்பிரபலமான பூட்டுக்களும் தள்ளு வண்டியில் விற்பனை செய்யும் திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இந்த புதிய திட்டத்தின் மூலம் உள்ளூர் சிறு வியாபாரிகள் பயன்பெறுவ தோடு அவர்களது வாழ்க்கை தரமும் உயர வழி வகுக்கிறது.



மதுரை மாவட்டம் உத்தங்குடி லக்கி பேலஸ் மஹாலில் நடைபெற்ற சிறு பாசனகுளங்கள் மறு சீரமைப்பு குறித்து மதுரை, விருதுநகர், இராமநாதபுரம், சிவகங்கை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்ட அளவிலான பயிற்சி பட்டறை கருத்தரங்கத்தை சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கூடுதல் இயக்குநர் எஸ்.எஸ்.குமார் குத்து விளக்கேற்றி துவக்கி வைத்து உரையாற்றினார். மதுரை கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) மோனிகா ராணா, இராமநாதபுரம் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) வீரபிரதாப்சிங், தூத்துக்குடி கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) ஆர்.ஜஸ்வர்யா, சென்னை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை கண்காணிப்பு பொறியாளர் குற்றாலிங்கம், செயற்பொறியாளர் ராஜேஸ் , செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) இந்துமதி ஆகியோர் உடன் உள்ளனர்.



தமிழக வனத்துறை அமைச்சர் க.பொன்முடி அறிவுறுத்தலின் பேரில், விழுப்புரம் தெற்கு மாவட்ட திமுக சார்பில், கள்ளக்குறிச்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக பொறுப்பாளர்.பொன்.கௌதமசிகாமணி தலைமையில் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் அருகில் அமைந்துள்ள அம்பேத்கர் திருவுருவச் சிலை முன்பு நடைப்பெற்ற எழுச்சி மிகு கண்டன ஆர்ப்பாட்டத்தில், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியத்தின் சார்பில் ,கள்ளக்குறிச்சி மாவட்ட ஊராட்சிகுழுதுணைப்பெருந்தலைவரும்,மாவட்ட திட்டமிடல் குழுவின் உறுப்பினரும், திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய செயலாளரும், மூத்த வழக்கறிஞருமான மு.தங்கம் தலைமையில் திரளானோர் பங்கேற்றனர். நிகழ்வில் திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் பாலு என்கிற பாலமுருகன் மற்றும் உறுப்பினர்கள் திரளானோர் பங்கேற்றனர்.

# மதுரை மாநகராட்சி அங்கூரான் நிறுவனத்தின் கீழ் அறிவியல் மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம்

மதுரை: டிச 20



மதுரை மாநகராட்சி அங்கூரான் நிறுவனத்தின் கீழ் அறிவியல் மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

மதுரை மாநகராட்சி அறிஞர் அண்ணா மாளிகையில் மதுரை மாநகராட்சி மற்றும் அங்கூரான் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் அறிவியல் மையம் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் தலைமையில், மேயர் இந்திராணி பொன்வசந்த் முன்னிலையில் அறிவியல் மையம் அமைப்பதற்கான ஒப்பந்தம் மதுரை மாநகராட்சி மற்றும் அங்கூரான் நிறுவனத்துடனான ஒப்பந்தம் மேற்கொள்ளப் பட்டது. புரிந்துணர்வு ஒப்பந்தத்தை அங்கூரான் நிறுவன முதன்மை செயல் இயக்குநர் பீமல் குமார் பட்வாரி , மதுரை மாநகராட்சி ஆணையாளர் ச.தினேஷ் குமார், இ.ஆ.ப., ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

மதுரை மாநகராட்சியின் சார்பில் 0.56 ஏக்கர் பரப்பளவில் புது ஜெயில் ரோடு பழைய கரிமேடு மீன் மார்க்கெட் இடத்தில் அனுமதி அளிக்கப்பட்டு பினாக்கல் இன்போடெக் சொலியூசன்ஸ் அங்கூரான் நிறுவனத்தின் சமூக பொறுப்பு நிதியின் கீழ் ரூ.2.5 கோடி மதிப்பீட்டில் அறிவியல் மையம் அமைக்கப்பட உள்ளது. அங்கூரான் நிறுவனத்தின் சார்பில் ரூ.5 லட்சம் மதிப்பில் அறிவியல் மையத்தின் மாதாந்திர பராமரிப்பு மேற்கொள்ளப்பட உள்ளது. மதுரை மாநகராட்சி சார்பில் குடிநீர் மற்றும் மின் கட்டணம் சேவை மேற்கொள்ள உள்ளது.

அங்கூரான் அறிவியல் மையம் தமிழ்நாட்டின் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு பல்வேறு கல்விச் செயல்பாடுகளை வழங்குகிறது, இயற்பியல், வேதியியல், உயிரியல் மற்றும் கணிதத்தில் சோதனைகளுக்கான ஆய்வகங்கள், மின்சாரம் மற்றும் இயந்திர மாதிரிகள் ஆண்ட்ரோ போட்களை உருவாக்கு வதற்கான வசதிகள், கணினி நிரலாக்கம், உலகளாவிய அறிவியல் மேம்பாடுகள் மற்றும் விஞ்ஞானிகளின் இந்த மையத்தில் இடம்பெறும்.

அங்கூரான் அறிவியல் மையம் அதன் சேவைகளுக்கான செலவுகளை ஈடுகட்ட இலாப நோக்கற்ற அடிப்படையில் கட்டணம் வசூலிக்கப்பட உள்ளது. அரசு உதவி பெறும் பள்ளிகளின் குழந்தைகளுக்கு அனுமதி இலவசம் மற்றவர்களுக்கு நுழைவு கட்டணமாக பெரியவர்களுக்கு ரூ.50,அரசு சாராத பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு ரூ.25/ கட்டணம் வசூல் செய்ய நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அங்கூரான் அறிவியல் மையம் அதன் கொள்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களின்படி அங்கூரான் அறிவியல் மையத்தால் நிர்வகிக்கப்படும் மற்றும் பின்வரும் 5 உறுப்பினர்களைக் கொண்ட ஒரு நிர்வாகக் குழுவினரை கொண்டு செயல்பட உள்ளது. அரசு பிரதிநிதிகளாக 1. ஆணையர், மதுரை மாநகராட்சி 2. மாநகராட்சி கல்வி அலுவலர் ஆகியோர் குழுவில் இடம் பெறுவார்கள்.

இந்நிகழ்வில் துணை மேயர் தி.நாகராஜன், மக்கள் தொடர்பு அலுவலர்கள் சாலிதளபதி, மகேஸ்வரன், அங்கூரான் நிறுவனம் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் முன்னாள் அமைச்சர் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் தலைமையில் டாக்டர் அம்பேத்கரை இழிவாக பேசிய உள்துறை அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மானாமதுரை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாதுரை நகர செயலாளர் பொன்னுச்சாமி ஊராட்சி ஒன்றிய துணைத் தலைவர் முத்துச்சாமி கிழக்கு ஒன்றிய செயலாளர் துரை ராஜாமணி மற்றும் நகராட்சி வார்டு கவுன்சிலர்கள் மற்றும் திமுக இளைஞரணி ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்





மதுரை மாவட்டம் ஊமச்சிகுளம் மூன்று கிராம இளைஞர் அணி சுரேஷ் சார்பில் முதலாம் ஆண்டு வடமாடு ஜல்லிக்கட்டு திருவிழா வணிகவரிமற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. ஊமச்சிகுளம் சுரேஷ் ஆழ்வார்புரம் மருது ஆனந்த் ராஜாமணி வீர மணிகண்டன், முருகன், குணா, சிறப்பு அழைப்பாளராக ராம்நாடு ராஜா ஆதித்யா,தென்னிந்திய பார்வர்டு பிளாக் திருமாறன் ஜி, பாரி மறவன்,ஜீவிதா நாச்சியார் அமமுக, ஆகியோர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத், இ.ஆ.ப., தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.அஜய் சீனிவாசன், இணை இயக்குநர் (வேளாண்மை) பெரியசாமி , மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை)மனோரஞ்சிதம் , அரசு அலுவலர்கள் மற்றும் விவசாய பெருமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

மத்திய அமைச்சர் அமித்ஷாவை கண்டித்து தேனி மாவட்டம் கம்பத்தில் திமுக சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. முன்னாள் டெல்லி சிறப்பு பிரநிதி பெ.செல்வேந்திரன் தலைமை வகித்து ஆர்ப்பாட்டத்தை தொடங்கி வைத்தார். ஆர்ப்பாட்டத்தில் நகர செயலாளர்கள் வீரபாண்டியன், பால் பாண்டி ராஜா, தலைமை செயற்குழு உறுப்பினர் குரு. குமரன், அலாவுதீன், கராத்தே ராமகிருஷ்ணன், ஏ.ராஜன், ஏ. சாதிக்அலி எம்சி, சல்மான் பார்சி எம்சி உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்.



Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161